# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

## தரம் நான்கு (முதலாம் தவணை)

## 2022

### கிறிஸ்தவம்

முன்பிள்ளைப் பருவவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

**நாட்டின் இடர் சூழ்நிலை காரணமாக பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.**

நாட்டின் COVID – 19 தொற்று இடர்காலம் மற்றும் இன்றைய நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2021, 2022ம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு முதலாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியவசியமான பகுதிகள் முன்வைக்கப்ப டுகின்றன. இவ்வத்தியவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில், முதலாம் தவணைக்குரிய மிகவும் அத்தியவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரமுண்டு. மாற்றங்களை ஏற்படுத்த வாய்ப்புத் தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புக்களை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது எனக் குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவு படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவு படுத்தப்பட்ட செயற்பாடுகளை வீட்டில் இருந்து செய்வித்தலின் போது மாணவர்கள் எந்த விதத்திலும் இடர் நிலைக்குத் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்போது சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி என்பவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.

அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தயையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

கிறிஸ்தவம்  தரம் 4

| | பாடத்திற்கு அவசியமான தொனிப்பொருள் | தேர்ச்சி | கற்றற் பேறுகள் | விடய உள்ளடக்கம் | ஆசிரியர் வழிகாட்டி நூல்/பாடப் புத்தகத்தின் செயற்பாடு கள் | ஆசிரியர் வழிகாட்டி நூல்/பாடப் புத்தகத்தின் செயற்பாட்டிற் கான பக்கம் | காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கடவுளின் அன்பும் பாதுகாப்பும் | கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் அனுபவத்தில் காண்பார்.<br>மறு அன்பு காட்டுவார் | கடவுளின் வாக்குறுதியின் அடையாளமாக வானவில்லின் மூலமாகக் கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் அறிந்து அழகிய வானவில் மாதிரியுருவை ஆக்கம் செய்வார் | கடவுளின் வாக்குறுதி-வானவில்<br>தொ.நூல் 9:16 | படிமுறை 1,2,3<br>பாடப் புத்தகம் 4ம் பாடம் | ப. 7-8<br>ப. 10-13 | 2 மணி |
| | | | இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் மேகத்தூண்,நெருப்புத் தூண் மூலமாகக் கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் அனுபவத்தில் கண்டனர் என்பதை நம்பி ஏற்று | கடவுளின் வழிகாட்டலும் பாதுகாப்பும் - மேகத்தூணும் நெருப்புத் தூணும்<br>விடு.பயணம் 13:21-22 | படிமுறை 1,2,3<br>பாடப் புத்தகம் 5ம் பாடம் | ப. 9-10<br>ப. 14-16 | 2 மணி |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நெருப்புத் தூணும், மேகத் தூணும் அவர்களுக்கு வழிகாட்டிய நிகழ்வினை விளக்குவார் | | | | | |
| | | | காகத்தினால் போசிக்கப்பட்ட எலியாவுக்கு கடவுளின் அன்பும் பாதுகாப்பும் கிடைத்த வழிமுறைகளை அறிந்து நாம் கடவுளின் பாதுகாப்பை உணரும் முறைகளைப் பெயரிடுவார் | கடவுளின் பாதுகாப்பு<br>கடவுள் காகம் மூலமாக எலியாவைப் போசித்தல்<br>1 அரசர் 17:7 | படிமுறை 1,2,3<br>பாடப் புத்தகம் 6ம் பாடம் | ப. 11-12<br>ப. 17-19 | 2 மணி | |
| | | | இயேசு கடல் மீது நடத்தல் நிகழ்வில் பேதுரு கடவுளின் பிரசன்னத்தை உணர்ந்து கொண்ட முறையை அறிந்து அச்சம்பவத்தில் பேதுருவினால் கூறப்பட்ட கூற்றினை எழுதுவார் | கடவுளின் பிரசன்னம் - கடல் மீது நடத்தல்<br>மத்தேயு 14:22-33 | படிமுறை 1,2,3,4<br>பாடப் புத்தகம் 7ம் பாடம் | ப. 13-14<br>ப. 20-22 | 2 மணி | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| 2 | கடவுளின் அன்புக்கு மாறுத்தரமாக கிறிஸ்தவ விழுமியங்களை வளர்த்தல் | கடவுளின் அன்புக்கு மாறுத்தரமாக கிறிஸ்தவ விழுமியங்களை வளர்ப்பார் | விண்ணப்பம்- தியானம் வழிபடும் முறைகள் மூலமாகக் கடவுளின் அன்புக்குப் பிரதியுத்தரம் காட்ட முடியும் என்பதை விசுவாசித்துச் சிறு தியான வழிபாட்டில் கலந்துகொள்வார் | விண்ணப்பமும் தியானமும் வழிபடும் முறைகள்<br>பாடல்<br>சித்திரம்<br>நாடகம்<br>அபிநயம் | படிமுறை 1,2,3<br>பாடப் புத்தகம்<br>9ம் பாடம் | ப. 17-19<br><br>ப. 27- 29 | 2 மணி |
| | ஆண்டவர் இயேசுவை அறிதல் | 4.0<br>ஆண்டவர் இயேசுவை அறிந்து கொள்வார். | 4.1<br>இயேசுவைப் பின்பற்றி வாழ்ந்த திருத்தூதர்கள் போன்று நாமும் | 4.1<br>பன்னிரு திருத்தூதர்கள் மாற்கு 3:13 -19 | படிமுறை 1,2,3<br>பாடப் புத்தகம் | ப. 18-19<br><br>ப. 30-33 | 2 மணி |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆவரைப் பின்பற்றி வாழ்வார் | இயேசுவைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதை ஏற்று அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவார்<br><br>இயேசுவின் திருத்தூதர்களுடன் இணைந்து பணி செய்த பெண் சீடர்கள் தொடர்பான விடயங்களை சேகரிப்பார் | <br><br>பெண்சீடர்கள்<br>லூக்கா 8:1-3 | 10ம் பாடம்<br><br>படிமுறை 1,2,3<br>பாடப் புத்தகம் 11ம் பாடம்<br>. | <br><br>ப. 20<br>ப. 34-36 | <br><br>2 மணி |